# மாண்டிசொரிப் பாடத்திட்டம் [இரண்டரை-------ஆறு வயது]

அன்பர்களே!

வீட்டின் சூழலில் இருந்து குழந்தை மெதுவாக சமுதாயத்திற்கு வரும் வேளை இந்த வயது.மிகவும் கவனமாக ஆசிரியர்களும் பெற்றோர்களும் செயலாற்றும் தருணம் இதுவாகும்.வயலில் முளை விட்ட நெல் நாற்றாங்காலைக் கூட பக்குவமாக உரிய சமயம் பார்த்து மாற்றுவர் உழவர்.அதைப் போல் நம் பிள்ளைகளை மிகவும் பத்திரமாக அடுத்த சூழலுக்கு எடுத்துச் செல்லும் கடமை நமக்கு உண்டு.அதனால் தான் இந்த ''ப்ரீப்ரைமரி பள்ளி'' ஒரு வீட்டின் மாதிரியாய் செயல் படுகிறது.வெளியுலக வாழ்க்கைக்குக் குழந்தைகளைப் பழக்கும் மாதிரி உலகம் இது.

மற்ற பள்ளிகளில் ஆசிரியர்களின் பிடியில் மாணவர்கள் குதிரைகளைப் போல் கையாளப் படுவர்.அதாவது மாணவர்களின் செயல்பாடுகள் அனைத்தும் ஆசிரியர்களின் எண்ணப்படி இருக்கும்.அவர்களின் கடிவாளம் ஆசிரியர்கள் கைகளில் உள்ளன.ஆனால் மாண்டிசொரிப் பள்ளியில் மாணவர்கள் ஆட்டு மந்தைகள் போல் செயல்படுவர்.அதாவது,ஆட்டு மந்தைகள் தன் இஷ்டம் போல் எங்கும் மேயும்,ஆனால் மேய்ப்பாளனின் கண்கானிப்பு மிகவும் கவனமாக இருக்கும்.எல்லைமீறும் போது அவை வழிநடத்தப் படும்.

இந்த வயதுக்கு உரிய பாடத் திட்டங்கள் மாண்டிசொரியால் மிகுந்த ஆய்வுகளின் அடிப்படையில் திட்டமிடப் பட்டுள்ளது.இங்கே தரப்படும் பல பாடங்கள் பல பள்ளிகளில் நடைமுறையில் உள்ளன.சில மாற்றங்கள் இருக்கலாம்.மாண்டிசொரியைப் பொறுத்தவரை குழந்தைக்கு முதலில் அதன் தாய்மொழி,நாடு,ஊர்,கலாச்சாரம்,பண்பாடு ஆகியவை பழக்கப் பட வேண்டும்.அவற்றை மதிக்கத் தெரிய வேண்டும்.எனவே பள்ளியின் அலங்காரப் பொருள்கள்,சாதங்கள் அனைத்தும் சொந்த மண்ணின் வாழ்வியலுக்கு ஏற்ப இருத்தல் வேண்டும்.

**உதாரணங்கள்:**

க.வாசலில் தோரணங்கள்,மணிமாலைகள்,திரைச்சீலைகள்,மேஜை விரிப்புகள் இந்தியக் கலைநுணுக்கத்துடன் அமைதல்.

உ. மேஜைகள்,நாற்காலிகள்,மாணவர்களின் பாய்விரிப்புகள்,எழுதும் மரப்பலகைகள்[சௌக்கிகள்----சதுரவடிவான குட்டையான மேஜை.மாணவர்கள் சமணம் இட்டு அமர்ந்து அதைப் பயன் படுத்துவர்],அலமாரிகள் ஆகியவை பாரம்பரியமிக்கவையாக இருக்கலாம்.

ங.ஷோகேஸ்களில் அழகான பொம்மைகள்,பூச்சாடிகள் வைக்கலாம்.

ச. பத்து நாட்களுக்கு ஒருமுறை சுவர்ப் படங்கள்,சில அரிய வகைக்கலைப் பொருள்கள் மாற்றி அமைக்கப் பெறலாம்.

ரு.அழகான பூச்செடிகள்,தாவரவகைகள் தோட்டத்
தில் இடம் பெறுதல் வேண்டும்.தோட்டவேலை மிகவும் முக்கியமான பாடம் ஆகும்.

சு. நல்ல மென்மையான உணர்வுகளைத் தரும் வால்போஸ்டர்கள் இடம் பெறலாம்.தாய்மையை உணர்த்தும் அழகான படங்கள் இடம் பெறலாம்.மாண்டிசொரி தன் பள்ளிகளில் மேரிமாதாவின் படத்தை வைத்து இருந்தார்.நாம் யசோதா-கண்ணன்,பார்வதி-கணபதி-முருகன் எனத் தாய்மையின் அடையாளங்களை மாட்டலாம்.

எ. எவ்வளவுக்கு எவ்வளவு தூய்மையும் ஒழுங்கும் அமையப் பெறுகிறதோ அவ்வளவு நல்லது.அச்சூழல் குழந்தைகளின் மனதில் சாந்தத்தை உண்டாக்கும்.

அ. பாதுகாப்புச் சாதனங்களான தீயணைப்புக் கருவிகள்,முதலுதவிப் பெட்டி,மருந்துகள் ,எடை மெஷின், உயரத்தை அளக்கும் வரை படம்,தர்மாமீட்டர் ஆகியவை அவசியம் இடம் பெற வேண்டும்.பல பள்ளிகள் ஹோமியோபதி மருத்துவர்களின் ஆலோசனைக்கு ஏற்ப முக்கிய மருந்துகளை வைக்கின்றன.

கூ. விளக்கு,அழகான ஸ்வாமி படம் \பொம்மை வழிபாட்டு இடத்தில் அமையப் பெற வேண்டும்.அழகான மண் உருளியில் தண்ணீர் விட்டு தினமும் குழந்தைகளைப் பூக்கள் கொண்டுவரச் செய்து அதில் மிதக்க விடலாம்.

க0. சிறிய மணி,[மாணவர்களின் கவனத்தினை நம் பக்கம் ஈர்க்க] ,கடிகாரம் தேவை.

**இனி பள்ளியின் முக்கிய இடங்களைக் காணலாம்.**

*சுத்தமான கட்டிட அமைப்பு.சுற்றுச் சூழலை அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருக்கவும்.
*வளமான சிறிய தோட்டம்.அவ்வப்போது மாணவர்கள் தோட்டவேலையில் ஈடுபட வேண்டும்.
*மாணவர்களுக்கு எட்டும் உயரத்தில் முறையாக பொருள்களை வைக்க அலமாரிகள் சுவற்றோரமும் , அறையின் இடையில் தடுப்பாகவும் அமைக்கப் படலாம்.
*அறையின் மையத்தில் நீள்வட்டமும் அதை வெட்டுவது போல் ஒரு கோடும் வரையப் பட வேண்டும்.[வெள்ளைப் பெய்ண்ட்]
*அதன் மீது மாணவர்களை நடக்க விட்டுப் பயிற்சி செய்யலாம்.அதன் மீது தான் சுற்றி அமர்ந்து ஒருநாளின் முதல் நிகழ்ச்சியான வழிபாட்டினை ஆரம்பிக்கவும்.
*அறையின் ஒருபுறத்தில் ஆசிரியர்கள் அமரும் மேஜை,நாற்காலி இடம் பெறலாம்.அவர்கள் உட்கார்ந்தால் மாணவர்களைப் பார்க்கும்படி இருத்தல் வேண்டும்.
*அறையின் ஒரு ஓரத்தில் ஸ்னாக்ஸ்[சிற்றுண்டி]சாப்பிடும் இடம் அமைய வேண்டும்.
*சௌக்கிகள் சுவருடன் ஒட்டி வரிசையாக அடுக்கப் பட்டிருக்க வேண்டும்.அருகிலேயே பாய்கள் வைக்கும் இடமும் அமையலாம்.
*வாசலின் அருகில் செருப்புகள்,பைகள் வைக்கும் அலமாரி இருத்தல் வேண்டும்.
*புத்தகங்கள் இருக்கும் அலமாரிகளுக்கு அருகிலேயே சிறு மெத்தையும்,தலையணைகளும் அமையப் பெறலாம்.இதன் மீது அமர்ந்து மாணவர்கள் படிப்பர்.இதற்கு ‘‘ ரீடிங் கார்னர்’’ என்று பெயர்.
*ஜன்னல்களின் அருகில் பொதுவாக எதையும் வைக்க வேண்டாம்.ஏனெனில் வகுப்புக்கு வெளியே பார்க்க மாணவர்களுக்கு வசதி செய்துதர வேண்டும்.
*தவறு செய்தால் அமைதியாக ஓரிடத்தில் அமர ஒரு இடத்தை ஒதுக்கவும்.
*இவை தவிர பல பள்ளிகள் வசதிக்கும் இடத்துக்கும் எண்ணத்துக்கும் ஏற்ப பல விஷயங்களைப் புகுத்துவர்.
*வெளியிலே தேசியக்கொடி ஏற்றும் கம்பம் நடப்பட வேண்டும்.
*நல்ல ஆடியோ---வீடியோ நிகழ்ச்சிக்கு உரிய சாதனங்களும் இடமும் அவசியம்.
*பலவிதமான சிறு இசைக்கருவிகள் இடம் பெறலாம்.
*ஆபிஸ் அறை தனியாகவும்,பெற்றோர்களும் ,விருந்தினர்களும் அமரும் இடமும் தேவை.
*ஸ்டாக் அறை, ஆபிஸ் அறைக்குள் இடம் பெறலாம்.

**முக்கியமான மூன்று பாடங்கள்;**

ஆறு வயதுக்குள் குழந்தையின் உடலும்,மனமும் ,மொழியும்,கணித அறிவும்,பகுத்தறியும் திறனும் வளரவேண்டும்.இதை அடிப்படையாக வைத்தே மாண்டிசொரியின் பாடத் திட்டமும் சாதனங்களும் அமைக்கப் பெற்றுள்ளன.அவை,

* இ பி எல் எனப்படும் ‘‘ எஷன்ஷியல் ப்ராக்டிக்கல் லைஃப் ஆக்டிவிட்டிஸ்’’.இவை அனைத்தும் அன்றாட வாழ்க்கைத் தேவைகளைத் தன்னிச்சையாக செய்யும் வேலைகளின் பயிற்சி.இவை நாட்டுக்கும்,ஊருக்கும் கலாச்சாரத்தின் படி மாறும்.எந்த அளவிற்கு இ பி எல்

சாதனங்கள் இடம் பெறுகின்றனவோ அந்த அளவிற்கு மாணவர்களின் வேலையும்,காலமும் விரையமாகாமல் செயல்படும்.இ பி எல் சதனங்களை அவ்வப்போது ஆசிரியர்கள் புதிது புதிதாக அறிமுகம் செய்தல் அவசியம்.அந்நியநாட்டின் பழக்கவழக்கங்களை முறையாக தேவைக்கு ஏற்ப அறிமுகம் செய்யவும்.

க.மனிதனுக்கு மிகவும் தேவையான பழக்கவழக்கங்களை நாம் கற்றுத் தரவேண்டும்.பல சமயங்களில் அவற்றை ஆசிரியர்கள் சில சமயங்களில் நாடகமாக நடித்துக் காட்டவேண்டும்.ஒருநாள்,பல நாள் என பழக்கவழக்கங்கள் சதா தற்றுக்தரப் பட வேண்டும்.பல பழக்கவழக்கங்கள் பல குடும்பங்களில் இல்லாமல் போகலாம்.அவற்றை ஆசிரியர்கள் தான் கற்றுத் தர வேண்டும்.பிள்ளைகள் உடனே எல்லாவற்றையும் பின்பற்றுவார்கள் என்ற கனவு வேண்டாம்.இன்று விதைத்த விதை ஒருநாள் முளைக்கும்.முதலில் நம் மீது நமக்கு நம்பிக்கை தேவை.
யாராவது உங்கள் பள்ளிக்கு வர இருப்பின் அதற்கான முன்னேற்பாடு செய்து பிள்ளைகளின் செயல்பாடுகளை முறைப்படுத்தவும்.

உ.பள்ளியில் உள்ள சாமானங்களை சுத்தம் செய்தல்,பொருப்புடன் கையாளுதல்,உரிய இடத்தில் வைத்தல் ஆகியவை மிகவும் முக்கியமான முதல் பாடங்கள் ஆகும்.
உதாரணம்:பாயை எப்படி அதன் பெட்டியில் இருந்து கொண்டு வருவது,அதை எப்படி விரிப்பது,அதை எப்படி மீண்டும் சுருட்டி வைப்பது.இவை எல்லாமே பாடம் ஆகும்.

ரு.உங்களையோ ,ஆயாவையோ உதவிக்கு எப்படி அனுகுவது என்பதை முதலில் கற்றுத் தாருங்கள்.பல பள்ளிகளில் ஆசிரியர்களை ‘‘ஆண்ட்டி’’ என்று அழைப்பர்.ஆனால் நாம் ‘‘டீச்சர்’’ என்றே அழைக்கப் பழக்கப் படுத்தலாம்.

**ச. இனி என்னென்ன வகையான செயல்கள் செய்யலாம் என்று பார்க்கலாம்:**

அ. கூட்டுதல்,குப்பை அள்ளுதல்,அதைக் குப்பைத் தொட்டியில் போடுதல்,தரையை சுத்தம் செய்தல்,ஈரத்துணியால் துடைத்தல்,கழுவுதல்,வாசல் தெளித்தல்,கோலமிடுதல்,வகுப்பை அலங்கரித்தல்,விளக்கேற்றுதல்,பூக்களைப் பிரித்தல்,மாலை கட்டுதல்,தூசு தட்டுதல்,விரிப்புகளை மாற்றி ஒழுங்கு செய்தல்.

ஆ. கைகளைக் கழுவுதல்,முகம் கழுவுதல்,கால்களைக் கழுவுதல்,ஆடைகளைத் துவைத்தல்,காய வைத்தல்,எடுத்து மடித்தல்,உரிய இடத்தில் வைத்தல்,அயர்ன் போடுதல்,காய வைக்கும் போது க்ளிப் போடுதல்.

இ. கத்தி,அரிவாள்,அரிவாள் மனை,கத்தரிக்கோல்,ஊசி ஆகியவற்றைக் கையாளுதல்,உபயோகித்தல்.

ஈ. ஸ்டேப்ளர்,பின்வகைகள்,கம்,ஃபெவிகால்,பசை உபயோகம்.

உ.பென்சில் சீவுதல்,ரப்பர் பயன்படுத்துதல்,ஸ்கேல் பயன்படுத்துதல்.

ஊ. கலர் பென்சில்கள்,க்ரயான்ஸ்,பேஸ்ட் கலர், ப்ரஷ்கள் பயன்படுத்தல்.

எ. அரிதல்,வெட்டுதல்,உடைத்தல்,கட்டுதல்,இழுத்தல்.

ஏ. சப்பாத்தி மாவு பிசைதல்,சப்பாத்திமாவு தேய்த்தல்,காய் வெட்டுதல்,துருவுதல்,உரித்தல்,சந்தனம்--மஞ்சள் அரைத்தல்.

ஐ. தண்ணீர் பிடித்தல்,லெமன் ஜூஸ் கலக்குதல்,மோர் சிலுப்புதல்,பொட்டுக்கடலை இடித்தல்,சிறு ஆட்டுக்கல்லில் அரைத்தல்,சிறு ராகிக்கல் பயன்படுத்துதல்.

ஒ. டம்ளர்கள் ,பாத்திரங்கள்,கரண்டிகள் ,ஸ்பூண்கள் உபயோகம்.[மண் , பீங்கான், எவர்சில்வர், பித்தளை,கண்ணாடி,ப்ளாஸ்டிக் வகை]

ஓ. சலித்தல்,பிரித்தல்,பாகுபடுத்துதல்,புடைத்தல்.

ஔ. விதவிதமான சட்டை பட்டன்கள்.கொக்கிகள்.நாடாக்கள்,ஜிப்புகள்,ஷூ லேஸ்,சாக்ஸ்,தொப்பி,குடை,ரெயின் கோட் உபயோகம்.

ஃ. கண்ணாடி துடைத்தல்,பித்தளை பாலிஷிங் செய்தல்.

க். தன்னை அலங்காரம் செய்து கொள்ளுதல்.

ங். உணவினை எப்படிப் பரிமாறுதல் என்று கற்றுத் தருதல்.

ச். சிறு சமையல் வேலைகள்.

ஞ். உண்டியலில் காசு போடுதல் , பம்பரம் சுற்றுதல்,பல வகையான மூடிகளை மூடிக்கழற்றுதல்,திரி திரித்தல்,தீப்பட்டி உபயோகம்,மெழுகுபர்த்தி உபயோகம்,ஊதுவர்த்தி உபயோகம்,ஸ்விட்ச்கள்---வயர்கள் உபயோகம்.

ட்.புத்தகங்களை எப்படிக் கையாள்வது,பேப்பர்கள், க்ளிப்கள்,அட்டைகள் உபயோகம்.

ண். ஏதாவது அபயம் ஏற்பட்டால் எப்படி உங்களிடம் வருவது ,மேலும் எந்த இடத்தில் பத்திரமாக ஒன்று கூடுவது என்பதைக் கற்றுத் தருதல் மிகவும் அவசியம்.

இவை மட்டும் அல்லாமல் பல புதிய இ பி எல்களை நாம் சேர்க்கலாம்.

ஐம்புலன்களின் இயக்கத்தினை முறைப் படுத்தி உடல்--மன--அறிவு இயக்கத்தினை ஒழுங்காக்கும் சாதனங்களை ‘‘ சென்சோரியல் மெட்டீரியல்’’ என்கிறார் மாண்டிசொரி.அவை முழுக்க முழுக்க அறிவியல் ஆய்வின்படி வடிவமைக்கப் பட்டவை.இவை முறைப் படி ஆசிரியர்களால் பயிற்சிசெய்யப் பட்டபின்னரே குழந்தைகளுக்கு அறிமுகம் செய்யப் பட வேண்டும்.இவற்றைப் பற்றி அடுத்த கட்டுரையில் காணலாம்.இப்போது பெற்றோர்களுக்கு வீட்டிலும் எப்படிப்பட்ட பொருள்களைப் பிள்ளைகளுக்குத் தரலாம் என்று ஓரளவுக்குப் புரியும்.

நன்றி!